12.03.2024

அ.வ.எண். 128-2018

வாசா.1 - ராமசாமி

1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனக்கு விற்பனை செய்த நஞ்சப்ப கவுண்டர் வகையறாவிற்கு 447/2 காலையில் மொத்தம் விஸ்தீரணம் 7.30 ஏக்கர். நான் அதில் 7.09 ஏக்கர் கிரயம் வாங்கியுள்ளேன். அந்த 7.09 ஏக்கர் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. 447/2ஏ என நஞ்சப்ப கவுண்டர் வகையறா பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 7.30 ஏக்கரில் 7.09ற்காக போக மீதமுள்ள நிலம் 0.21 ஏக்கர் நஞ்சப்ப கவுண்டர் வகையறாவிற்கு தான் பாத்தியம் என்றால் நாங்கள் அளந்துபார்க்கும்போது 7.09 ஏக்கர் தான் இருந்தது அப்படி கூடுதலாக இருந்திருந்தால் அவருக்கு தான் பாத்தியம். மீதமுள்ள 21 செண்ட் பூமிக்கு நஞ்சப்ப கவுண்டர் பெயரில் பட்டா உள்ளதா என்று எனக்கு தெரியாது. மீதமுள்ள சொத்தை நஞ்சப்ப கவுண்டர் மக்கள் அனுபவம் செய்து வருகிறார்களா என்றால் எனக்கு தெரியாது.

மேற்படி மீதமுள்ள சொத்தை நஞ்சப்ப கவுண்டர் வகையறா தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் இந்த வழக்கிற்காக மறுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நஞ்சப்ப கவுண்டர் தவிர வேறு யாரும் அந்த 21 செண்ட் பூமியை அனுபவம் செய்து வருகிறார்களா என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த 21 செண்ட் நிலத்தில் நஞ்சப்ப கவுண்டர் பெயரில் பட்டா தவறுதலாக விட்டுப்போனதை சேர்க்க கேட்டு நஞ்சப்ப கவுண்டர் தாசில்தார் அலுவலகத்தில் மனு கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. நான் 451 காலையில் 3 பத்திரங்களின் அடிப்படையில் தனித்தனியாக 85.05 செண்ட், 2.85 1/2 ஏக்கர், 2.50 ஏக்கர் மற்றும் பொது இடம் 26 செண்ட் கிரயம் பெற்றுள்ளேன். நான் நஞ்சப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 6.22 ஏக்கரை மீறி கூடுதலாக 26 செண்ட் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் பத்திரப்படி இல்லாமல் கூடுதலாக கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா படியும், அனுபவப்படியும், UDR படியும் கிரயம் பெற்றுள்ளேன். புல எண்.452 ல்

நான் கிரயம் பெற்றது வெறும் 73 சென்ட் மற்றும் பொதுத்தடம் 2 1/4 சென்ட் தடத்திற்கு கிரயம் பெற்றுள்ளேன். பொது இடம் கிணறு வாரி, வாய்க்கால் ஒதுக்கப்பட்ட 36 சென்ட்டில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை, மேற்படி பொது இடம் 36 சென்ட்டிற்குள் 2.15 சென்ட் தடப்பாத்தியம் வருகிறதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 2.15 சென்ட் தடம் எதனடிப்படையில் எனக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் 17.08.1959 பாகப்பிரிவினை படி எனக்கு தடப்பாத்தியம் கொடுக்கப்பட்டது. மேற்படி 1959 பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் குறிப்பிடும் தடப்பாத்தியம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் குறிப்பிடும் 36 சென்ட் பொது இடம் எந்த உட்பிரிவில் வருகிறது என்றால் எனக்கு தெரியாது. நான் கிரயம் பெற்ற 73 சென்ட் புல எண். 452/3 ஏ என்பதாகும், அது உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பு 452/3 ல் இருந்தது. பொது தடம் 2.15 சென்ட் 452/2 ல் இருந்தது. 452 புல எண்ணில் நஞ்சப்ப கவுண்டர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 1.44 ஏக்கரை விட அதிகாமாக எங்களுக்கு விற்பனை செய்ததையும் அவர்களது அனுபவத்தில் உள்ளதையும் சேர்த்தால் வருகிறது என்றால் சரியல்ல. 17.08.1959 பாக சாசன பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பொது பாத்தியங்கள் எதுவும் பாத்தியம் இல்லாத நிலையில் கருப்பசாமி, பழனிக் கவுண்டர், மாரப்ப கவுண்டர் வகையறாக்கள் எனக்கு 12.06.2002 ல் எழுதிக்கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல.

நான் கிரயம் பெற்ற எந்த பத்திரத்திலும் UDR படி கிரயம் பெற்றதாக குறிப்புகள் இல்லை என்றால் நினைவில்லை. 09.08.2012 ல் ராஜமாணிக்கம் வழக்கறிஞர் மூலம் 3ம் பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் நினைவில்லை. நான் அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்டுள்ளேன் என்றால் நினைவில்லை. 21.08.2012 ல் 1, 2 பிரதிவாதிகள் அவரது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் நினைவில்லை. நான் அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டு வேண்டுமென்று நினைவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்புகளில் பிரதிவாதிகள் UDR படி உள்ள அளவுகளுக்கும் பத்திரப்படி உள்ள அளவுகளுக்கும் வேறுபாடு உள்ளதை குறிப்பிட்டு அனுப்பியுள்ளனர் என்றால் எனக்கு

தெரியாது. பாலசுப்பிமணியம் வகையறா அவருக்கு பாத்தியப்பட்ட பூமியை ஒரு பகுதியை 2003 ல் ரவிச்சந்திரா என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அது தெரியும்.

பாலசுப்பிமணியம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 26 சென்ட் நிலத்தை அவரது மகன் லோகேஷ்வரனுக்கு 18.04.2012 ல் ஒரு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அது எனக்கு 2017 ல் தான் தெரியும். 3 முதல் 4 பிரதிவாதிகள் 2013 ம் ஆண்டு அவர்களுக்கு பாத்தியபட்ட பொது இடம் பொருத்து ஒரு பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்பது எனக்கு 2017 ல் தெரியும். அதனடிப்படையில் கணேஷகவுண்டருக்கு பொது இடம் 36 சென்ட் பாலசுப்பிமணியம் வகையறா பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் 451 புல எண்ணில் பொது இடம் 56 சென்ட் இல் பொதுவில் பாதியான 26 சென்ட் பொருத்து 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது.

எனக்கு 451 ல் பொதுவில் பாதி 26 சென்ட் அதேபோல் பாலசுப்பிமணியம் வகையறாவிற்கும் பொதுவில் பாதி 26 சென்ட் என்றால் எனக்கு பொதுவில் பாதி சரிதான், பாலசுப்பிமணியத்திற்கு பொதுவில் பாதி 26 சென்ட் பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் 452 காலையில் மொத்தம் உள்ள 36 சென்ட் பொது இடமும் கணேஷகவுண்டர் மற்றும் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் பரிவர்த்தனை பத்திரம் செய்வதற்கு முன்பு நான் சார் பதிவாளர் அலுவலத்தில் ஆட்சேபணை மனு கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குள் ஏற்படுத்திக்கொண்ட 2013 பரிவர்த்தனை பத்திரத்தில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் என்னுடைய உட்பிரிவு எண்ணை வைத்து பத்திரம் செய்துள்ளதால் எனக்கு ஆட்சேபணை உள்ளது.

451 புல எண்ணில் தான் என்னுடைய உட்பிரிவு எண்ணை சேர்த்துள்ளார்கள். அந்த உட்பிரிவு எண்.451/8, 451/9. இரண்டு காலைகளுக்கும் சேர்த்து 39 சென்ட் தான் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மீதமுள்ள 13 சென்ட் வேறு உட்பிரிவில் உள்ளது என்றால் சரியல்ல. நான் 07.09.2012 வழக்கறிஞர்

ஏ.சின்னசாமியை வைத்து பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் பாலசுப்பிமணியம் அவரது மகனுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் செல்லாது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு அனுப்ப என் வழக்கறிஞரிடம் சொல்லவில்லை. எனக்கு அனுப்பிய அறிவிப்பில் பதிலறிவிப்பு தான் அனுப்பினேன். நான் தனியாக வழக்கறிஞர் அனுப்பிவிட்டு நான் தற்பொழுது பிரதிவாதிகள் அனுப்பிய அறிவிப்பிற்கு பதிலறிவிப்புதான் அனுப்பினேன் என்று தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அதேபோல் 11.09.2012 ல் நீதிமன்றத்தில் ஒரு கேவியட் மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம், சாட்சி பின்னிட்டு நினைவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். எனவே பரிவர்த்தனை பத்திரம் மற்றும் 2012 செட்டில்மெண்ட் ஆவணம் பொருத்து அப்பொழுதே தெரியும் என்றும், தற்பொழுது வழக்கிற்காக 2017 ம் ஆண்டு தான் அந்த ஆவணங்கள் பொருத்து தெரிய வந்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2017 ம் ஆண்டு வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்க்கும்போது தெரியவந்தது அந்த வில்லங்க சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வில்லங்க சான்றிதழ் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்த போது நான் எனக்கு பாத்தியப்பட்ட பூமியில் உட்பிரிவு செய்தேன் என்றால் சரியல்ல.

என்னுடைய கிரய முன்னோர்களுக்கு பாத்தியமில்லாத சொத்தை சேர்த்து கிரயம் பெற்றுவிட்டு அதை மோசடியாக தக்கவைத்து கொள்ள நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பரிவர்த்தனை பத்திரம் மற்றும் செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எனக்கு முன்பே தெரிந்திருந்தும் நான் மூன்று வருடம் காலம் கடந்து இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்பதால் என்னுடைய வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டாவை விட பத்திரம் தான் உரிமையை காட்டக்கூடிய ஆவணம் என்று தெரிந்திருந்தும் பட்டாவின் அடிப்படையில் கூடுதலான சொத்தை நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்பதற்காக

முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்றுள்ள கூடுதல் விஸ்தீரணங்கள் என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றும் அது உண்மையான உரிமையாளர் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

நான் வழக்கு விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு சொத்தில் கிரய முன்னோர்களான நஞ்சப்ப கவுண்டரின் வாரிசுகள், கந்தசாமி கவுண்டரின் வாரிசுகள், கருப்பசாமி, மாரப்ப கவுண்டர், பழனியப்ப கவுண்டர் வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் அவ்வாறு சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.நான் பிரதிவாதிகள் மீது அன்னூரில் பிரச்சனை நடந்ததாக மேட்டுப்பாளையம் குற்றவியல் நீதிமன்றத்தில் தனிப்பிராது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். அந்த முதல் தகவல் அறிக்கையின் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வழக்கு பொய் வழக்கு என்று முடித்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல.தற்போது அந்த வழக்கு நிலுவையில் உள்ளது, நான் சொல்வது தவறு என்றும் அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.என்னுடைய புகார் பொய் புகார் என்பதால் வழக்கு முடித்து வைக்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.மேற்படி பொய் புகாரின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு மன உளைச்சல் ஏற்பட்டு முன் ஜாமின் வாங்க சிரமப்பட்டார்கள் என்றால் சரியல்ல.என்னுடைய வழக்கு பொய் வழக்கு என்றும், எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/ராமசாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga

District Munsif
Sulur